செ.வெ.எண்.336 நாள்.25.05.2018.

திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பணியாற்றுவேன் – திருநெல்வேலி மாவட்ட முதல் பெண் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று (25.05.2018) திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு என அழைக்கப்படும் திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுள்ளேன். நான், 2009 இ.ஆ.ப. பேட்ஜ். 2011ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் உதவி ஆட்சியர் பயிற்சியாகவும், தொடர்ந்து வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் 3 ஆண்டுகள் சார் ஆட்சியராகவும், சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (கல்வி)யாகவும், அரசு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி நிறுவனத்தில் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளேன். தென்மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவராக பணியாற்றிட விரும்பினேன். அதற்கு வாய்ப்பளித்த அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொதுமக்களின் அடிப்படை தேவைகளுக்கும், ஊரக வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்து பணியாற்றுவேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார் மற்றும் துணை ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.